அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல:- 17/95

எனது இல. 111/163/1/21/எல்/எல்/11
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07
1995, யூன் மாதம் 13 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

பிரசவ விடுமுறை - தாபனக் கோவையின் X11ஆம்
அத்தியாயத்தின் 18:1 பிரிவுக்கான திருத்தங்கள்

மேற்படி விடயம் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் X11ஆம் அத்தியாயத்தின் 18ஆம் பிரிவின் மீதும் 1989.03.23 ஆந் தேதிய 22/89 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீதும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள தாபன விதிக்கோவையின் X11ஆம் அத்தியாயத்தின் 8:1 ஆணைப் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு சேர்க்கப்படுகிறது.

18:1 சட்டப்படி திருமணமாகாமலிருக்கும் அரச உத்தியோகத்தர் ஒருவர் திருமணமாகாமலிருந்தும் உண்மையாக அவ் உத்தியோகத்தரால் தடுக்க முடியாதிருந்த கற்பழிப்பின் விளைவால் ஒரு குழந்தையை பெற்றிருக்குமிடத்து அவருக்கு 18ஆம் பிரிவின் ஏனைய ஆணைப் பிரிவுகளுக்கு அமைவாக பிரசவ விடுமுறைகள் அனுமதிக்க விடுமுறை அனுமதிக்கும் அதிகாரிக்கு முடியும்.

18:1:1 இதற்காக.

(அ) நிகழ்வு நிகழ்ந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையத்திலோ அல்லது அவரின் வதிவுப் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ காலதாமதமின்றி முறைப்பாடிட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட நீதி நிருவாக வலயத்திற்குட்பட்ட நீதிவான் நீதிமன்றத்தில் அது தொடர்பாக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டோ அல்லது வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

02. இலக்கம் 18:1:1 பிரிவின் (அ)வில் குறிப்பிட்டுள்ளபடி பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டின் ஒரு பிரதியும் (ஆ)வில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அல்லது வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமாதிபரால் சிபாரிசு செய்யப்பட்ட கடிதத்தின் ஒரு பிரதியும் இரகசியமான முறையில் விடுமுறை அதிகாரியிடம் சமர்ப்பித்தல் போதும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற